**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**OS No.132/2023**

01.04.2026. வா.சா. 1 ஆறுமுகம் த/பெ. தொப்பளான்
சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் செய்தது எல்லாம் பராமரிப்பு பணிகள் என்றால் சரிதான். கடக்கால் வெட்டி சுவர் எழுப்பும் வேலைகள் எல்லாம் செய்தேன். ஒவ்வொரு பணி மேற்கொள்ளும்போதும் அளவீடு புத்தகம் ஒன்று பிரதிவாதியால் கொடுக்கப்பட்டு நான் செய்யும் பணி விவரங்கள் அதில் எழுதவேண்டும் என்றால் அப்படி எந்த புத்தகமுன் என்னிடம் கொடுக்கவில்லை. அவ்வாறு என்னிடம் புத்தகம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்டது என்றும் அதை நான் வழக்கில் தாக்கல் செய்ய தவிர்க்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் செய்த பணியை பிரதிவாதியின் பொறியாளர் பார்வையிட்டு நான் செய்த பணியின் அளவு மற்றும் மதிப்பை குறித்துக்கொண்டார்கள் என்றும் அதன் நகல் எனக்கும் வழங்கப்பட்டது என்று சொன்னால் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். ஆனால் அறிக்கை எனக்கு கொடுக்கவில்லை. நான் செய்த ஒவ்வொரு பணிக்கான மதிப்பீடு மற்றும் மதிப்பீடு சம்மந்தப்பட்ட அறிக்கை பொறியாளர் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தங்கும் விடுதி 3 மற்றும் 4 ஆகியவற்றிற்கு செய்த பராமரிப்பு பணியின் மதிப்பு ரூ. 2,95,000/- என்றும் ஆனால் நான் செய்த பணியின் மதிப்பு ரூ. 1,52,135/- மட்டும்தான் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி மேற்படி மதிப்பீடு வெளி மதிப்பீடு மட்டும் தான் என்றும் உட்புற மதிப்பீடு இல்லை என்று கூறுகிறார். அந்த உள்வேலைகள் செய்ததற்கான மதிப்பீடு நான் பிரதிவாதியிடம் கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை. அதனால் நான் கொடுக்கவில்லை. உண்ணாமலையம்மன் தங்கும் விடுதியின் நான் செய்த பணிக்கான மதிப்பு ரூ. 29,658/- மட்டும் என்று சொன்னால் அது தவறு. நெல்குடோனின் ஒப்பந்த மதிப்பு ரூ. 2,35,000/- ஆக இருந்தாலும் நான் செய்த மதிப்பு ரூ.1,55,104/- என்று சொன்னால் தவறு. அது வெளிப்புற தோற்றத்தின் மதிப்பு மட்டுமே என்றும் உட்புற மதிப்பு இல்லை என்று சாட்சி சொல்கிறார். உண்ணாமலையம்மன் விடுதியின் மற்றொரு பராமரிப்பு பணியின் ஒப்பந்த மதிப்பு ரூ. 3,50,000/- ஆக இருந்தாலும் நான் செய்த மதிப்பு ரூ.1,82,057/- என்று சொன்னால் தவறு. நான் செய்த

அனைத்து பணியையும் அளவீடு செய்து அதன் மதிப்பு ரூ.5,18,000/—என்று முடிவு செய்து பிரதிவாதி தரப்பில் எனக்கு மேற்கூறிய தொகைக்கு ஒரு காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது கண்ணுக்கு தெரியும் வெளிப்பு மதிப்பீடு மட்டும்தான். உள்வெளிப்பு வேலைக்கான மதிப்பீடுகள் அல்ல. நான் செய்த பராமரிப்பு பணிக்கான தொகை பிரதிவாதியால் எனக்கு வழங்கப்பட்டது என்றும் நான் அதற்கு அதிகப்படியான வட்டியை வைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. பிரதிவாதியை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.